தகவல் சட்டம் 2005
அறியும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 08.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 1208/A/2023

திரு.இரா.கார்த்திக் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், (தனியார் பள்ளிகள்), மாவட்டக் கல்வி அலுவலகம், விருதுநகர் மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (08.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.இரா.கார்த்திக் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு.வே.திருமேனிநாகராஜன், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், (தனியார் பள்ளிகள்), மாவட்டக் கல்வி அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 02.05.2022 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் தாலுகாவுக்குட்பட்ட வடக்கு தேவதானம் கிராமத்தில் செயல்பட்டுவரும் லிட்டில் பிளவர் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிக்கான அரசு நிர்ணயிக்கப்பட்ட கல்விக்கட்டடண விபரம் 2015 - 2022 ஆண்டு வரை உட்பட 7 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 21.12.2022 |

| | |
|---|---|
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 19.01.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திரு.வே.திருமேனிநாகராஜன், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், (தனியார் பள்ளிகள்), மாவட்டக் கல்வி அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு, ஓ.மு.எண்.1105/அ2/2025, 19.08.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக, தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகல் மற்றும் மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிய அஞ்சலக அனுப்புகை சீட்டின் நகல் ஆகியவற்றினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தான் கோரிய தகவல்கள் தனக்கு முழுமையாக அளிக்கப்படவில்லை எனவும், முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறும், தான் குறிப்பிட்ட பள்ளியில் கள ஆய்வு செய்வதற்கு அனுமதி அளிக்குமாறும் கோரினார்.

4. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் உரிய தகவல்கள் அளிக்கப்படவில்லை என ஆணையம் கருதுகிறது. எனவே, பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து மனுதாரரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)ன்படி ஆஜர்படுத்தி, மனுதாரர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் (முதல் ஒரு மணி நேரத்திற்கு இலவசமாகவும், அதற்கு மேல் அனுமதிக்கப்பட்ட கட்டணம் செலுத்தியும் பார்வையிடலாம்) அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, உரிய சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் ஆய்வு செய்த வீடியோ அல்லது புகைப்படத்தையும் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினையும் இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.***

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களில் இனம் 1-க்குரிய தகவலை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி***

*மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 1208/A/2023**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (தனியார் பள்ளிகள்),
மாவட்டக் கல்வி அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம் - 626 002.

**மனுதாரர்**

திரு. இரா.கார்த்திக்
ரஹ்மத் நகர் (பை பாஸ் ரோடு),
பேரையூர்,
மதுரை - 625 703.

Copy to file

KRM/PA 13.07.2026